**தலைப்பு 115 – பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச்செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக்கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்காய்விற்கான சான்றின்மை

(i) உத்தியோகத்தர்களின் வருகையினையும் வெளிச்செல்கையினையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையால் 2013 ஆம் ஆண்டில் அமைச்சரின் அலுவலகத்திலும் பிரதி அமைச்சரின் அலுவலகத்திலும் சேவையில் ஈடுபட்டிருந்த நாற்பத்தி மூன்று (43) உத்தியோகத்தர்களிற்காக செலவிடப்பட்ட ரூபா 3,583,533 தொகையான மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவினம் என்பனவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) பற்றுச்சீட்டுக்கள், ஆவணங்கள் போன்ற தேவையான சான்றுகள் இன்மையால் ரூபா 797,335 கூட்டுத்தொகைக்குரிய அமைச்சின் 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்படுத்த முடியாதிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 132,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 123,650,580 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த தேறிய ஏற்பாட்டில் ரூபா 8,349,420 அதாவது 6.3 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 115,000,000 | 110,705,988 | 4,294,012 | 3.7 |
| மூலதனம் | 17,000,000 | 12,944,592 | 4,055,408 | 23.8 |
| மொத்தம் | 132,000,000 | 123,650,580 | 8,349,420 | 6.3 |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11501 | 4,000,000 | 3,187,424 | 1,200,000 | 3,274,311 | 13,000,000 | 9,765,590 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 104,336 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவையினை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) அமைச்சினால் கடன்களை வழங்குகையில் பின்பற்றவேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 91,217 கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 03 பதவி நிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 05 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அப்பிரமாணங்களுக்கு முரணாக 02 சந்தர்ப்பங்களில் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 20,000 ஐ விஞ்சிய ரூபா 56,840 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

அமைச்சினால் பிரதி அமைச்சர் அலுவலகத்திற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 33 பேர்ச் காணியும் அங்கு அமைந்துள்ள 462 சதுர மீற்றர் அளவிலான இரண்டு மாடிக் கட்டிடத்திற்காக 2013 யூன் முதல் 2014 யூன் வரை ரூபா 5,483,520 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடத்தில் அந்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதென விற்பனை செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூபா 1,380,633 மற்றும் ரூபா 1,589,850 தொகையான சொத்துக்கள் தொடர்பாக அமைச்சினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 05 வாகனங்களை முறையான அங்கீகாரமின்றி சனாதிபதி செயலாளரின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 04 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், இவ்வாகனங்களைப் பெற்றுக்கொண்ட திகதி, பயன்படுத்திய நபர்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

வாடகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடமொன்றில் அமைச்சின் அலுவலகம் நடாத்தப்பட்டு வருவதுடன் வாடகை உடன்படிக்கையின் 19 ஆம் பிரிவிற்கு முரணாக புதுப்பித்தல் நடவடிக்கைகளிற்காக 03 சந்தர்ப்பங்களில் திறைசேரி நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி மூலதனச் செலவினமாக ரூபா 234,962 தொகை செலவிடப்பட்டிருந்தன.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுகக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ)** இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 454 | 464,391 | அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை பொருட் பதிவேட்டில் உட்படுத்தாமல் 02 உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | - | 07 குழாம் வாகனங்களுக்குரிய ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் 268(அ) மாதிரிப் பத்திரத்தில் பதிவுசெய்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய பயணம் தொடர்பான மாதாந்த குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 மற்றும் 5.2 ஆம் பந்திகள். | - | ஆறு உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து 11 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்

------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் 2:11 ஆம் பந்தி | | அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களிற்கு ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒருமுறையும் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2006 யூலை 14 ஆம் திகதிய 11/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் IV ஆம் பந்தி | | உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் தயார் செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1(11) ஆம் பந்தி | | போக்குவரத்துப் படி மற்றும் எரிபொருள் படியினைப் பெற்றுக்கொள்ளும் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்குரிய உத்தியோகத்தர்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விடுவிக்கப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iv) | 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சரின் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளியேறல்கள் விரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. |

(ஈ) அரச நிதி சுற்றறிக்கைகள் -

------------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 59,641 | அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர் களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி தொலைபேசிப் பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை<br>-------------------------------------------<br>2010 ஏப்ரல் 29 ஆந் திகதிய 146 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 7,787,617 | அமைச்சின் வளவிற்கு வெளியே நடாத்திச் செல்லும் பிரதி அமைச்சர் அலுவலகத்திற்காக 2013 ஆம் ஆண்டில் குத்தகை மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 7,787,617 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2013 ஏப்ரல் 16 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் HRD/ CHI/S/194 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | | சீனாவில் நடைபெற்ற செயலமர்விற்காக அமைச்சிலிருந்து பங்குபற்றியிருந்த உத்தியோகத்தரால் பெற்றுக்கொண்ட பயிற்சி தொடர்பான அறிக்கையொன்று நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கோ அல்லது அமைச்சின் செயலாளருக்கோ சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.6 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள நலிவுகள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 43 ஆண்டுகள் பழமைவாய்ந்த சபுகஸ்கந்த எண்ணைச் சுத்திகரிப்புக் குதம் மிகவும் குறைந்த இயலளவுடன் செயற்பட்டமையால், அது தற்போது காணப்படும் எந்தவொரு மசகு எண்ணெய் வகையினையும் சுத்திகரிப்பதற்கு முடியுமான உயர்ந்த தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடிய உயர் தரத்திலான நவீனமயப்படுத்தும் தேவைப்பாடு காணப்பட்ட போதும் இதற்கான நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவாக்கச் செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் எரிபொருள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டு நாணயமாற்றினை நாட்டிற்கு மீதப்படுத்துதல், இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணையின் தன்மை தொடர்பாக நிலவும் குறைபாடுகளை குறைத்தல், முடிவுற்ற எரிபொருள் (Finished Products)

இறக்குமதிக்காக செலவிடப்படும் அதிக கிரயத்தை குறைத்தல், இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணையினை உள்நாட்டில் சுத்திகரிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எண்ணெய் உற்பத்தியின் பொருளதார நலனைப் பெற்றுக்கொள்ளல், குறைந்த விலையில் காணப்படும் மசகு எண்ணையினை (Heavy Crude Oil) பயன்படுத்தவதற்கு கிடைக்கும் இயலுமை மற்றும் செயற்பாட்டு இலாபத் தன்மையை அதிகரிக்க கூடியதாக இருத்தல் போன்ற சாதகமான நிலைமையை அடைந்துகொள்வதற்கு உள்ள இயலுமை விடுபட்டிருந்தன.

(ஆ) மசகு எண்ணை போக்குவரத்துச் செய்யப்படும் வழிகளின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் 25 வருடங்களாக இருந்த போதிலும், தற்போது காணப்படும் 43 ஆண்டுகள் மற்றும் 70 ஆண்டுகள் பழமையான மசகு எண்ணை போக்குவரத்துச் செய்யப்படும் வழி முறைமை மூலம் அதன் எளிய ஆயுட்காலமான 25 ஆண்டுகளை மிகைத்து நீண்டகாலமாக இந்நாட்டின் முடிவு பெற்றோலிய தேவைப்பாட்டின் 2/3 அளவில் பூர்த்தி செய்கின்றது. அவ்வாறு சேதமடைந்துள்ள வழிகள் மூலம் போக்குவரத்துச் செய்தல் அபாயகரமானதாக இருந்தமையால் நாட்டில் காணப்படும் குழாய் வழி செயற்திட்டத்தை துரிதப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் பெற்றோலியப் போக்குவரத்தினை செயற்திறனாக மேற்கொள்ளல், நுகர்வோருக்கு கிடைக்கும் பெற்றோலியத்தின் உயர்ந்த தன்மை, எதிர்காலத்தில் அதிகரிக்கும் கேள்வியினை நிறைவேற்றுதல், பெற்றோலிய இருப்புக்கள் குறைவதினால் ஏற்படும் நட்டங்கள் மற்றும் நிதி நட்டங்களைக் குறைத்தல், பழுதடைந்த குழாய் வழிகளைப் பராமரிக்கும் கிரயத்தைக் குறைத்தல் போன்ற சாதகமான நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

(இ) பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் நிலக்கீழ் குழாய்வழி முறைமையினை நிர்மாணித்தல் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 1,000 மில்லியன் செலவில் தொழில்நுட்ப சாத்திய ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டு அதன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிர்மாண நடவடிக்கைகளின் நிலைமை தொடர்பாக போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) கொள்வனவு வழிகாட்டல் முறைமையிலிருந்து விலகுதல்

(i) 2013 சனவரி 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பெற்றோலிய கைத்தொழில் அமைச்சரால் ஐக்கிய அரபு இராச்சியத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சுற்றுலாவிற்கு அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.1 ஆம் பந்திக்கு முரணாக விலைகோரல் மேற்கொள்ளாமல் அமைச்சினால் ரூபா 277,181 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அமைச்சினால் அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.3 ஆம் பந்திக்கு முரணாக, விலைகோரல் இல்லாமல் வாகனங்கள் திருத்தப்பட்டிருந்த அனேகமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறு கூடிய விலை விபரங்களின் கீழ் டொயோட்டா லங்கா கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த வாகனத் திருத்தங்களுக்காக ஆண்டின் போது ரூபா 1,270,565 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 135,000 பெறுமதியான ''அப்பல் ஐ போன் (64 ஜீ.பீ)'' வகை செல்லிடத் தொலைபேசியொன்றை வழங்கி 07 மாதங்களின் பின்னர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டிருந்ததால் ரூபா 109,500 செலவு செய்து மீண்டும் செல்லிடத் தொலைபேசி வழங்கப்பட்டிருந்த போதிலும், காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் அறிக்கை அல்லது ஏனைய எந்தவொரு சாட்சியொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 1.8 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சீனாவில் நடைபெற்ற செயலமர்விற்காக பங்குபற்றியிருந்த அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அனைத்து செலவினங்களையும் குறித்த வெளிநாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக அறிவிக்காமல் அமைச்சிலிருந்து ரூபா 1,289,541 தொகையைப் பெற்றுக்கொண்டு 25 நாட்களாக முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 1.9 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது திடீர் விபத்துக்கள் காரணமாக அமைச்சிற்கு சொந்தமான 10 வாகனங்களிற்கு சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், திருத்தங்களுக்காக ரூபா 4,860,508 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கான காப்புறுதி இழப்பீடாக ரூபா 4,696,214 தொகை மாத்திரமே கிடைத்திருந்தமையால் அமைச்சிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 164,294 ஆக இருந்தது.

(ஆ) அவ்வாறே முன்னைய ஆண்டில் அவ்வாறு ஏற்பட்டிருந்த ரூபா 159,098 தொகையான நட்டம் உட்பட, 2009 – 2012 காலப்பகுதியில் விபத்திற்குட்பட்டிருந்த அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் திருத்தங்களுக்காக கிடைக்கப் பெற்றிருந்த காப்புறுதி இழப்பீடு போதியளவு இல்லாமை காரணமாக அமைச்சிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 203,268 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிலும் அமைச்சு இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு அமைச்சரின் அலுவலகத்தின் ஊடகப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த கெமராவிற்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன், உத்தரவாதக் கால எல்லைக்குள்

மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களுக்காக அமைச்சினால் ரூபா 48,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்நட்டத்தை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அமைச்சினால் வாகனத் திருத்தங்களுக்காக தொடர்புபடுத்தும் போது 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் அது தொடர்பாக விசேட அறிவினைக் கொண்ட சுயாதீன நபர்களைக் கொண்டு அல்லது நிறுவனமொன்றின் மூலம் வாகனத்தைப் பரீட்சித்து மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது திருத்தத்தின் பின்னர் அது முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளதாக அது தொடர்பான விசேட அறிவினைக் கொண்டுள்ள சுயாதீன நபர் அல்லது நிறுவனத்தின் மூலம் உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டில் 17 வாகனங்களைத் திருத்தியமைப்பதற்காக ரூபா 3,873,572 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு உரித்தற்ற 02 வாகனங்களைப் பராமரிப்பதற்காக அமைச்சு 409,854 தொகை செலவிட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டில் பிரதி அமைச்சருக்கு 03 வாகனங்களுக்காக எரிபொருள் படிகளாக ரூபா 2,537,500 தொகை அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் 02 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதலால் அந்த இரண்டு வாகனங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,670,500 தொகையான எரிபொருளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் பிரதி அமைச்சரின் பதவியணியினரின் ஐந்து உத்தியோகத்தர்கள் எரிபொருள் படிகளாக ரூபா 2,155,056 தொகையையும் மூன்று உத்தியோகத்தர்கள் போக்குவரத்துப் படிகளாக ரூபா 1,080,000 தொகையையும் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், இந்த உத்தியோகத்தர்கள் பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய 4 வாகனங்கள் எரிபொருளுடன் பிரதி அமைச்சர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தால் அதற்காக ரூபா 1,113,948 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) அமைச்சரின் பதவியணிக்குரிய இணைப்புச் செயலாளருக்கு 2013 மே முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக போக்குவரத்துப் படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 522,528 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சாரதி ஒருவருடன் எரிபொருள் உட்பட அமைச்சரின் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த வாகனமொன்று இந்த உத்தியோகத்தரால் குறித்த காலப்பகுதியில் பயன்படுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாகனத்திற்காக கூட்டுத்தாபனத்தினால் குறித்த காலப்பகுதியில் 1,421 லீற்றர் டீசல் வழங்கப்பட்டிருந்ததுடன், திருத்தங்களுக்காக ரூபா 882,869 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 1.11 முகாமைத்துவ பலவீனங்கள்

வாகனங்கள் தொடர்பான கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சரின் அலுவலத்திலும் பிரதி அமைச்சரின் அலுவலகத்திலும் சேவையிலீடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,583,533 ஆன செலவினங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களைப் பரிசோதித்த போது குறித்த உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பாக உறுதிப்படுத்தல் இல்லாமல்

பரிந்துரைத்தல், கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் மற்றும் செலவினங்களை சான்றுறுதிப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சினால் வாகனப் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன், குழாம் வாகனங்களையும் உத்தியோகபூர்வ வாகனங்களையும் வெவ்வேறாக இனங்காண்பதற்காக முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வாகனத் திருத்தங்கள் தொடர்பாக பதிவேடொன்றும் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகனத் திருத்தங்கள் மற்றும் திருத்தங்களின் பின்னர் அகற்றப்பட்ட பாகங்களை மீண்டும் களஞ்சியத்திற்கு கையளித்தல் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வாகனங்கள் திருத்தம் தொடர்பான விபரங்கள் சம்பவக் குறிப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குழாமுக்குரிய 07 வாகனங்களுக்காக 2013 ஆம் ஆண்டில் எரிபொருள் செலவினமாக ரூபா 1,540,938 தொகை அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் செலவிடப்பட்டிருந்த போதிலும், ஓட்டப்பதிவேடுகள் சமர்ப்பிக்காமை, சம்பவக் குறிப்புப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வு பரசோதனை மேற்கொள்ளாமை போன்ற காரணங்களால் அச்செலவினங்களின் சிக்கனத் தன்மை தொடர்பாக நிறுவகத்தின் முகாமைத்துவம் போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.12 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 15 | 11 | 04 |
| (ii) மூன்றாம் நிலை | 52 | 40 | 12 |
| (iii) இரண்டாம் நிலை | 02 | 01 | 01 |
| (iv) ஆரம்ப நிலை | 27 | 20 | 07 |
| மொத்தம் | 96 | 72 | 24 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 24 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சின் செயற்திட்ட இல 02 இலுள்ள அமைச்சின் நிர்வாக மற்றும் நிறுவகச் சேவைகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த செயற்பாட்டு பதவியணியினரின் உத்தியோகத்தரொருவர் செயற்திட்ட இல 01 இன் கீழ் அமைச்சரின் பதவியணியின் ஊடகப் பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவருக்கு அமைச்சின் நிர்வாகம் மற்றும் நிறுவன சேவைகளின் கீழ் எவ்வித கடமைப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அமைச்சின் செயற்திட்ட இல 02 இன் கீழான நிதிஏற்பாடுகளிலிருந்து 2013 ஆம் ஆண்டில் இந்த உத்தியோகத்தருக்கு ரூபா 242,607 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.